**COPY OF DEPOSITION**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, ERODE.**

**O.S.** 248/2012

**PW1, தங்கமுத்து**

**நாள் 05-03-2019.**

**சாட்சி இன்று ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி மேற்கொள்ளப்படுகிறார்.**

7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ..

29.07.2009 மற்றும் 2012 ம் தேதிகளில் கிரையம் பெற்ற கிரையங்களுக்கான மூலப் பத்திரங்களை தாக்கல் செய்யயவில்லை. 2009 ம் தேதி கிரையம் பெற்ற போது மூலப்பத்திரத்தின் நகலை பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் அதன் ஜெராக்ஸ் நகலைப் பார்த்தேன். அது பதிவு செய்யப்பட்டிருந்ததா என்று எனக்குத் தெரியாது. கறார் ஆவணத்தை ஏற்கனவே பதிவு அலுவலகத்தில் பதிவு செய்திருந்தார்கள். அதன் ஜெராக்ஸ் நகலைத்தான் என்னிடம் காட்டினார்கள். அது ஜெராக்ஸ் என்பதால் வழக்குடன் அதை தாக்கல் செய்யவில்லை. நான் அதன் சான்றிட்ட நகலையும் வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 5 ம் பிரதிவாதியிடம் 11.04.2012 ம் தேதி கிரையம் பெற்றபோது 5 ம் பிரதிவாதிக்கு 16.09.2008 ம் தேதியிலேயே அந்த சொத்து கிரையம் மூலம் பாத்தியப்பட்டதை தெரிந்து கொண்டேன். 5 ம் பிரதிவாதியிடம் மூலப் பத்திரத்தைக் கேட்டபோது அது தொலைந்துவிட்டதாகவும் எனவே அதன் ஜெராக்ஸ் நகலை கொடுப்பதாகவும் சொன்னார். 5 ம் பிரதிவாதியின் அசல் மூலப் பத்திரம் இல்லாமல் ஜெராக்ஸ் நகலை வைத்துதான் என் கிரையப்பத்திரம் எழுதப்பட்டது. 5 ம் பிரதிவாதியிடம் நான் கிரையம் வாங்கிய போது மூலப்பத்திரத்தின் ஜெராக்ஸ் நகல் தவிர வேறு வருவாய்த்துறை ஆவணங்கள் எதையும் நான் பார்க்கவில்லை. 2 வது கிரையத் தொகை ரூ.3,50,000/- ஆகும். அந்தக் கிரையத் தொகையை 5 ம் பிரதிவாதியிடம் கொடுத்தேன். பத்திர எழுத்தரை வைத்து பத்திரம் எழுதியவுடன் கொடுத்தேன். 7 ம் பிரதிவாதி குப்புசாமி எதிர்வழக்குரைக்குப் பின்னர் அவருக்கும் 2 ம் பிரதிவாதிக்கும் ஒரு பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை ஏற்பட்டிருப்பதாக எதிர் வழக்குரையை வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேன். நான் ஆவணத்தைப் பார்க்கவில்லை. அந்த கிரைய உடன்படிக்கையின்படி 2 முறை கால நீட்டிப்பு செய்து கொண்டதாக அந்த ஆவணத்தில் இருப்பதாக சொன்னார்கள். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம் என்று நான் நோட்டீஸ் அனுப்பவோ, நேரிலோ கேட்கவில்லை. இன்றுவரை 7 ம் பிரதிவாதிக்கும், எனக்கும் கருத்துவேறுபாடும், மன வருத்தமும் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யும்போதும் வருத்தம்,

விரோதம் எதுவும் இல்லை. விரோதம் எதுவும் இல்லாத நிலையில் 7 ம் பிரதிவாதியைப் பார்த்து பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம் என்று நேரில் அணுகி நான் கேட்காததற்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் உள்ளதா என்றால் பின்னிட்டுதான் ஒரு தேவராஜன் என்பவரிடம் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக தெரிய வந்ததால் நான் நேரடியாக நீதிமன்றத்தை அணுகலாம் என்று முடிவு செய்து வழக்கு தாக்கல் செய்தேன். 2 கிரையத்தின்போதும் தாவா சொத்து சம்மந்தமாக பெருந்துறை நிலவள வங்கியில் கடன் பெற்று இருந்த விபரம் தெரியுமா என்றால் கடனை செலுத்தி தீர்த்திருந்தார். கடனை திருப்பி செலுத்திய இரசீது எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. 2ம் பிரதிவாதிக்கு இப்போதுவரை திருமணம் ஆகவில்லை. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து அழைத்துச் செல்லவில்லை. இதன் தொடர்புடைய வழக்குகளிலும் நீதிமன்ற ஆணையம் நியமனம் செய்து என்னை அழைத்துச் செல்லவில்லை. நான் திருப்பூர் நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கு ஒன்று தாக்கல் செய்துள்ளேன். பிரச்சினைக்குரிய இடங்களை கிரையம் பெறுவதுதான் எனது வழக்கம் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற கிரையப் பத்திரங்கள் செல்லாது என்றும், நான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. 2009 முதல் நான்தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறேன். வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்கு சம்மந்தப்படாதது என்றால் சரியல்ல. வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.